புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/TN/2026/0316/6130/1505

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 · இதழ்: 305 · 10-05-2026 · ஞாயிறு · பக்கம்- 4 · விலை- ரூ.5 · திருச்சி- புதுச்சேரி
Volum 01 · Issue: 305 · 10-05-2026 · Sunday · Pages - 4 · Price- Rs. 5 · Trichy-Puducherry

## மேற்கு வங்கத்தின் முதல் பாஜக முதல்வராக சுவேந்து அதிகாரி பதவியேற்றார்



கொல்கத்தா: மே. 10–

மேற்கு வங்கத்தின் முதல் பாஜக முதல்வராக சுவேந்து அதிகாரி பதவியேற்றார்.

கொல்கத்தாவின் பிரிகேட் பரேடு மைதானத்தில் நடைபெற்ற இந்த விழாவில் ஆளுநர் ஆர்.என். ரவி அவருக்குப் பதவிப் பிரமாணமும் ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். இந்த நிகழ்வில் பிரதமர் நரேந்திர மோடி நேரில் கலந்துகொண்டு சுவேந்து அதிகாரிக்குத் தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார். அவருடன் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாஜக தேசியத் தலைவர் நிதின் நபீன் மற்றும் பல்வேறு மத்திய அமைச்சர்கள் பங்கேற்றனர்.

ஆந்திர பிரதேச முதல்வர் சந்திரபாபு நாயுடு, உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வ சர்னா உள்ளிட்ட என்டிஏ ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்களும் இந்த விழாவில் கலந்துகொண்டனர். பதவியேற்பு விழாவுக்கு முன்னதாக, பிரதமர் மோடி மேடையில் இருந்த 98 வயதான மூத்த பாஜக தொண்டர் மகான்லால் சர்க்காரிடம் ஆசி பெற்றார்.

சமீபத்தில் நடைபெற்று முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில், பாஜக 207 இடங்களைக் கைப்பற்றி 15 ஆண்டுகால திரிணமூல் காங்கிரஸ் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது. சுவேந்து அதிகாரி நந்திகிராம் மற்றும் பவானிப்பூர் ஆகிய இரு தொகுதிகளிலும் போட்டியிட்டு வெற்றி பெற்றார். பவானிப்பூர் தொகுதியில் முன்னாள் முதல்வர் மம்தா பானர்ஜியை 15,115 வாக்குகள் வித்தியாசத்தில் அவர் தோற்கடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு காலத்தில் மேற்குவங்க சட்டப்பேரவையில் பாஜகவுக்கு 3 எம்எல்ஏக்கள் மட்டுமே இருந்தனர். இந்த எண்ணிக்கை கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் 77 எம்எல்ஏக்களாக உயர்ந்தது. தற்போதைய சட்டப்பேரவைத் தேர்தலில் 207 பாஜக எம்எல்ஏக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர். 9 மாவட்டங்களில் திரிணமூல் காங்கிரஸுக்கு ஒரு தொகுதிகூட கிடைக்கவில்லை.

## புதுச்சேரியில் ஆட்சி அமைக்க அனுமதி கோரி ஆளுநரிடம் கடிதம்: 13ம் தேதி முதல்வராக ரங்கசாமி பதவியேற்கிறார்



புதுச்சேரி: மே.10–

புதுச்சேரியில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தலைவராக ரங்கசாமி தேர்வு செய்யப்பட்டார். இதையடுத்து ஆட்சி அமைக்க உரிமை கோரி ஆளுநரிடம் கடிதம் அளித்தார். வரும் 13ம் தேதி முதல்வராக அவர் பதவியேற்கிறார்.

புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி 18 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள என்ஆர்.காங்கிரஸ் 12, பாஜக 4, அதிமுக, லஜக முறையே ஒரு இடத்தில் வெற்றி பெற்றுள்ளன.

புதுச்சேரியில் உள்ள 30 எம்எல்ஏக்களில் ஆட்சி அமைக்க 16 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவை. அதேநேரம் தற்போது தேசிய ஜனநாயக கூட்டணிக்கு 18 எம்எல்ஏக்கள் பலம் உள்ளதால் மீண்டும் ரங்கசாமி தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைய உள்ளது.

ஏற்கெனவே கடந்த 3 நாட்களுக்கு முன் என்ஆர்.காங்கிரஸ் கட்சியின் சட்டப்பேரவை கட்சித் தலைவராக ரங்கசாமி தேர்வு செய்யப்பட்டார். அதே போல் பாஜகவின் சட்டப்பேரவைக் கட்சித் தலைவராக நமச்சிவாயம் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

என்டிஏ கூட்டணி அமைச்சரவையில் பாஜவுக்கு எத்தனை அமைச்சர்கள் என்ற முதல் கட்ட பேச்சு வார்த்தை நடந்தது. இதில் எந்த முடிவும் எட்டப்படவில்லை. அதைத் தொடர்ந்து, புதிய ஆட்சி அமைய முதல்வர் பதவியை ரங்கசாமி தனது பதவியை ராஜினாமா செய்து, துணைநிலை ஆளுநர் கைலாஷ் நாதனிடம் நேற்று முன்தினம் கடிதம் அளித்தார்.

இதைத்தொடர்ந்து நேற்று நடந்த ஆலோசனைக் கூட்டத்தில், பாஜக மேலிடப் பொறுப்பாளர் மன்சுக் மாண்டவியா, ரங்கசாமி, பேரவையின் பாஜக தலைவர் நமச்சிவாயம், அதிமுக மாநிலச் செயலாளர் அன்பழகன், லட்சிய ஜனநாயக கட்சித் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் மற்றும் என்டிஏ கூட்டணி எம்எல்ஏக்கள் பங்கேற்றனர்.

இதில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தலைவராக ரங்கசாமி ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார். ரங்கசாமி ஆட்சி அமைக்க பாஜக, அதிமுக, லஜக கட்சிகள் ஆதரவுக் கடிதங்களை வழங்கின. கூட்டத்துக்கு பின் ரங்கசாமி கூறும்போது, "ஆட்சி அமைக்க உரிமை கோரி ஆளுநரை சந்திக்கவுள்ளேன்.

அதன்பிறகு பதவியேற்பு விழா தேதி பற்றி முடிவு செய்யப்படும். அமைச்சர்கள் பதவி யார் யாருக்கு, எந்தக் கட்சியினருக்கு என்பது பதவி தரும்போது தெரியும். பேரவைத் தலைவர் யார் என்பதையும் பிறகு தெரிவிக்கிறேன்" என்றார்.

என்டிஏ எம்எல்ஏக்கள் தரப்பில் விசாரித்த போது, "வரும் 13ம் தேதி ஆளுநர் மாளிகையில் நடைபெறும் விழாவில் முதல்வர் ரங்கசாமி பதவியேற்க முடிவு எடுத்துள்ளார்" என்று தெரிவித்தனர். இதுதொடர்பான முறையான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று தெரிவித்திருந்தனர்.

# விஜய் ஆட்சி அமைக்க விசிக ஆதரவு: பெரும்பான்மையை எட்டியது தவெக!





சென்னை: மே.10–

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக தனிப்பெரும் கட்சியாக 108 இடங்களைக் கைப்பற்றினாலும் கூட, பெரும்பான்மை இல்லாததால் இதுவரை ஆட்சியமைக்க இயலாமல் தவித்த நிலையில், மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் தவெகவுக்கு விசிக ஆதரவு தெரிவித்துள்ளது. இதன்மூலம் அக்கட்சி பெரும்பான்மையை எட்டியது.

இது தொடர்பாக தவெக எம்எல்ஏ ஆதவ் அர்ஜுனா கூறும்போது, "அனைத்து தோழர்களுக்கும் எங்களுடைய நன்றி. ஜனநாயகம் காக்கப்படும். தமிழக மக்களுடைய ஆதரவு டன் தமிழக முதல்வராக எங்கள் தலைவர் உருவாவார்" எனத் தெரிவித்தார்.

ஆனால், மிகவும் எதிர்பார்க்கப்பட்ட திருமாவளவன் செய்தியாளர்கள் சந்திப்பு இன்னமும் நடைபெறவில்லை.

தவெகவுக்கு ஆதரவு தெரிவித்து விசிக தலைவர் தொல்.திருமாவளவன் வழங்கியுள்ள கடிதத்தில், "தமிழக மக்களுக்கு நிலையான, ஜனநாயக முறை யிலான ஆட்சி கிடைக்கப்பெற வேண்டும் என்பதற்காக, தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் விசிக தனது 2 எம்எல்ஏ.,க்களின் ஆதரவையும் தவெகவுக்கு எந்த நிபந்தனையும் இன்றி வழங்குகிறது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐயூஎம்எல் ஆதரவு அறிவிப்பு:

விசிகவும் நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியதைத் தொடர்ந்து இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியும் ஆதரவைக் கொடுத்துள்ளது. ஆக, மொத்தம் 120 உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றுள்ளது தவெக. அடுத்தக் கட்டமாக ஆட்சி அமைப்பதற்கான நகர்வுகளை எதிர்கொண்டுள்ளது.

முன்னதாக, தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 108 இடங்களைக் கைப்பற்றிய தவெக தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. எனினும், ஆட்சி அமைக்க 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவைப்படும் நிலையில், முதலில் 5 எம்எல்ஏக்கள் கொண்ட காங்கிரஸ் கட்சி, திமுக கூட்டணியில் இருந்து விலகி தவெகவுக்கு ஆதரவு தெரிவித்தது. 2 தொகுதிகளில் போட்டியிட்டுள்ள விஜய், ஒரு தொகுதியை ராஜினாமா செய்ய வேண்டிய நிலையில், காங்கிரஸ் ஆதரவு மூலம் தவெக பலம் 112 ஆக உயர்ந்தது.

இதையடுத்து, ஆட்சி அமைக்க உரிமை கோரி ஆளுநர் அர்லேகரை சந்தித்து விஜய் கடிதம் வழங்கினார். ஆனால், 'ஆட்சி அமைக்கத் தேவையான 118 உறுப்பினர்களின் பட்டியலை சமர்ப்பித்தால் மட்டுமே அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' என்று ஆளுநர் உறுதிபடத் தெரிவித்தார். பெரும்பான்மைக்கு 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவைப்படும் நிலையில், திமுக கூட்டணியில் அங்கம் வகிக்கும் இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விசிக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (ஐயூஎம்எல்) ஆகிய கட்சிகளின் தலைவர்களை தவெக நிர்வாகிகள் சந்தித்து ஆதரவு கோரினர்.

இதன் தொடர்ச்சியாக, தவெகவுக்கு ஆதரவு அளிப்பது தொடர்பாக தீவிரமாக ஆலோசித்து வந்த இடதுசாரி கட்சிகள், இறுதியில் தவெகவுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதாக வெள்ளிக்கிழமை அறிவித்தன. இதற்கான அதிகாரப்பூர்வ ஆதரவுக் கடிதத்தை சென்னை தியாகராய நகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் சிடிஆர். நிர்மல்குமாரிடம் அக்கட்சித் தலைவர்கள் வழங்கினர். இதன்மூலம் தவெக பலம் 116 ஆக உயர்ந்தது.

அதேவேளையில், விசிக தலைவர் திருமாவளவனுடனும் தவெகவினர் பேச்சுவார்த்தை நடத்தினர். இதைத் தொடர்ந்து, இடதுசாரி தலைவர்கள் மற்றும் திமுக தலைவர் ஸ்டாலினுடன் திருமாவளவன் ஆலோசனை நடத்தியதாகவும் தகவல் வெளியானது.

இதனிடையே, வெள்ளிக்கிழமை மாலை 7 மணி அளவில் ஆளுநர் மாளிகை சென்ற விஜய், ஆளுநர் அர்லேகரை 3வது முறையாக சந்தித்து, எம்எல்ஏக்களின் ஆதரவுக் கடிதங்களை வழங்கினார். அதன்பின்னர், தியாகராய நகரில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளின் அலுவலகங்களுக்கு சென்ற விஜய், அங்கு அக்கட்சிகளின் தலைவர்களை சந்தித்து நன்றி தெரிவித்தார்.

தவெகவுக்கு பெரும்பான்மைக்கான 118 இடங்கள் கிடைக்காத நிலையில், ஆட்சி அமைப்பது தொடர்பாக ஆளுநரிடம் இருந்து வெள்ளிக்கிழமை அழைப்பு விடுக்கப்படவில்லை. இந்தப் பின்னணியில்தான் விசிகவும் ஆதரவு அளித்துள்ளது. அதன்பின் ஐயூஎம்எல் ஆதரவின் மூலம் தவெக பலம் இப்போது 120 ஆக உயர்ந்துள்ளது.

## "தமிழகத்தில் ஆட்சி அமைக்கும் கட்சிக்கு வாழ்த்துகள்": எடப்பாடி பழனிசாமி



சென்னை: மே.10–

'தமிழகத்தில் ஆட்சி அமைக்கும் கட்சிக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்' என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "நடைபெற்று முடிந்த 17வது தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தேர்தலில் பல்வேறு கட்சிகள் சார்பில் வேட்பாளர்கள் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளனர். தமிழ்நாட்டில் ஆட்சி அமைக்கும் கட்சிக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறியுள்ளார்.

தமிழகத்தில் பரபரப்பான அரசியல் சூழல் நீடிக்கும் நிலையில், பழனிசாமியின் இந்தப் பதிவு ஒரு 'சிக்னல்' ஆக கருதப்படுகிறது.

முன்னதாக, தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 108 இடங்களைக் கைப்பற்றிய தவெக, தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. எனினும், ஆட்சி அமைக்க 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவைப்படும் நிலையில், முதலில் 5 எம்எல்ஏக்கள் கொண்ட காங்கிரஸ் கட்சி, திமுக கூட்டணியில் இருந்து விலகி தவெகவுக்கு ஆதரவு தெரிவித்தது. 2 தொகுதிகளில் போட்டியிட்டுள்ள விஜய், ஒரு தொகுதியை ராஜினாமா செய்ய வேண்டிய நிலையில், காங்கிரஸ் ஆதரவு மூலம் தவெக பலம் 112 ஆக உயர்ந்தது.

இதையடுத்து, ஆட்சி அமைக்க உரிமை கோரி ஆளுநர் அர்லேகரை சந்தித்து, விஜய் கடிதம் வழங்கினார். ஆனால், 'ஆட்சி அமைக்கத் தேவையான 118 உறுப்பினர்களின் பட்டியலை சமர்ப்பித்தால் மட்டுமே அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' என்று ஆளுநர் உறுதிபடத் தெரிவித்தார். பெரும்பான்மைக்கு 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவைப்படும் நிலையில், திமுக கூட்டணியில் அங்கம் வகிக்கும் இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விசிக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (ஐயூஎம்எல்) ஆகிய கட்சிகளின் தலைவர்களை தவெக நிர்வாகிகள் சந்தித்து ஆதரவு கோரினர்.

இதன் தொடர்ச்சியாக, தவெகவுக்கு ஆதரவு அளிப்பது தொடர்பாக தீவிரமாக ஆலோசித்து வந்த இடதுசாரி கட்சிகள், இறுதியில் தவெகவுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதாக நேற்று அறிவித்தன. இதற்கான அதிகாரப்பூர்வ ஆதரவுக் கடிதத்தை சென்னை தியாகராய நகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் சிடிஆர். நிர்மல்குமாரிடம் அக்கட்சித் தலைவர்கள் வழங்கினர். இதன்மூலம் தவெக பலம் 116 ஆக உயர்ந்தது.

இதற்கிடையே ஐயூஎம்எல் கட்சியும் தவெகவுக்கு ஆதரவு அளித்துள்ளதாக தகவல் வெளியான நிலையில் அக்கட்சி இதற்கு மறுப்பு தெரிவித்தது. அதேபோல், விசிக தலைவர் திருமாவளவனுடனும் தவெகவினர் பேச்சுவார்த்தை நடத்தினர். இதைத் தொடர்ந்து, இடதுசாரி தலைவர்கள் மற்றும் திமுக தலைவர் ஸ்டாலினுடன் திருமாவளவன் ஆலோசனை நடத்தியதாகவும் தகவல் வெளியானது. முன்னதாக, நேற்று மாலை 7 மணி அளவில் ஆளுநர் மாளிகை சென்ற விஜய், ஆளுநர் அர்லேகரை 3வது முறையாக சந்தித்து, எம்எல்ஏக்களின் ஆதரவுக் கடிதங்களை வழங்கினார். அதன்பின்னர், தியாகராய நகரில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளின் அலுவலகங்களுக்கு சென்ற விஜய், அங்கு அக்கட்சிகளின் தலைவர்களை சந்தித்து நன்றி தெரிவித்தார்.

தவெகவுக்கு பெரும்பான்மைக்கான 118 இடங்கள் கிடைக்காத நிலையில், ஆட்சி அமைப்பது தொடர்பாக ஆளுநரிடம் இருந்து அழைப்பு விடுக்கப்படவில்லை. திருமாவளவன் தனது முடிவை இன்று மாலை அறிவிக்க உள்ளார். அதன் பிறகு, தவெகவுக்கு பெரும்பான்மைக்கான 118 எம்எல்ஏக்களின் ஆதரவு உறுதி செய்யப்பட்ட பிறகே, ஆளுநரிடம் இருந்து அழைப்பு வரும் என்று தெரிகிறது.

இதனிடையே, திமுக ஆதரவுடன் அதிமுக ஆட்சி அமைப்பதற்கான காய்நகர்த்தல்களை எடப்பாடி பழனிசாமி உள்ளிட்டோர் மேற்கொண்டு வந்ததாக தகவல்கள் பரவி வந்தன. இப்பின்னணியில் புதிதாக அமையவுள்ள ஆட்சிக்கு எடப்பாடி பழனிசாமி வாழ்த்து தெரிவித்துள்ளது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

# திருவள்ளூர் மாவட்டத்தில் 12 ம் வகுப்பு பொதுத்தேர்வு தேர்ச்சி சதவிகிதம் 90.63 சதவிகிதம்

## மாவட்ட ஆட்சியருக்கு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் நேரில் சந்தித்து பூங்கொத்து வழங்கி வாழ்த்து :



திருவள்ளூர் மே 10 :

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பள்ளிக்கல்வித்துறை சார்பாக 12 ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டத்தில் தேர்ச்சி சதவிகிதம் உயர்ந்து 90.63 சதவிகிதம் அடைந்துள்ளதால் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் அவர்களை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சொ.கற்பகம் நேரில் சந்தித்து பூங்கொத்து வழங்கி வாழ்த்து பெற்றார். அப்போது மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது :

மார்ச், ஏப்ரல் 2026 இல் நடைபெற்ற மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு முடிவுகள் 08.05.2026 அன்று காலை 9.30மணி அளவில் வெளியிடப்பட்டது. இத்தேர்வில் திருவள்ளூர் வருவாய் மாவட்ட அளவில் மொத்தமுள்ள 249 பள்ளிகளை உள்ளடக்கிய 117 தேர்வு மையங்களில் எழுதிய மாணவர்கள் 13586 மற்றும் மாணவிகள் 15116 ஆக மொத்தம் 28702 மாணாக்கர்கள் தேர்வு எழுதினார்கள்.

இதில் மாணவர்கள் 12500 பேர், மாணவிகள் 14512 பேர் மொத்தம் 27012 மாணாக்கர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர், திருவள்ளூர் வருவாய் மாவட்ட அளவில் மாணவர்கள் 92.01 சதவீதம் தேர்ச்சியும், மாணவிகள் 96.00 சதவீதம் தேர்ச்சியும் ஆக மொத்தம் 94.11 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளனர். கடந்த கல்வியாண்டை விட 2.62 சதவீதம் கூடுதல் தேர்ச்சி பெற்று மாநில அளவில் 36 வது இடத்திலிருந்து 27 வது இடத்திற்கு இக்கல்வியாண்டில் முன்னேறியுள்ளது.

மேலும் அரசு பள்ளிகளில் (102 அரசுப் பள்ளிகள்) பயிலும் 6211 மாணவர்கள், 7506 மாணவிகள் ஆக மொத்தம் 13717 தேர்வு எழுதினார்கள். அதில் மாணவர்கள் 5409 மற்றும் மாணவிகள் 7023 ஆக மொத்தம் 12432 மாணாக்கர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி சதவீதம் மாணவர்கள் 87.09% மாணவிகள் 93.57% மொத்தம் 90.63% ஆகும். கடந்த கல்வியாண்டை விட 4.38 சதவீதம் கூடுதல் தேர்ச்சி பெற்று மாநில அளவில் 38 வது இடத்திலிருந்து 28 வது இடத்திற்கு இக்கல்வியாண்டில் முன்னேறியுள்ளது.

கடந்த வருடம் 64 பள்ளிகள் 100 சதவீதம் பெற்ற நிலையில் இவ்வருடம், வருவாய் மாவட்ட அளவில் 70 பள்ளிகள் ( 6 அரசு பள்ளிகள் உட்பட) 100 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளது.இந்த தேர்ச்சி சதவீதத்தை உயர்த்த பணியாற்றிய அனைத்து கல்வித்துறை அலுவலர்கள், தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவ செல்வங்களுக்கு வாழ்த்து தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன் என மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

இதில் மாவட்ட கல்வி அலுவலர்கள் அமுதா(திருவள்ளூர்), பன்னீர் (பொன்னேரி)(பொ), ராஜு, உதவி திட்ட அலுவலர் பாலமுருகன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் நேர்முக உதவியாளர் மீனாகுமாரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக எழுத்தர் (பள்ளி கல்வி) பவானி ஆகியோர் கலந்துகொண்டனர்.



மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வில் மாநில அளவில் அரசுப் பள்ளிகள் தேர்ச்சி சதவீதத்தில் திருச்சிராப்பள்ளி மாவட்டம் 3 ஆம் இடத்தை பெற்றுள்ளதைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் முதன்மை கல்வி அலுவலர் கிருஷ்ணபிரியா மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு நினைவு பரிசா கேடயம் வழங்கி பாராட்டினார். அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் பாலாஜி மற்றும் பள்ளிக்கல்வித்துறை அலுவலர்கள் உள்ளனர்.

# மின்வாரிய ஒப்பந்தத் தொழிலாளர்களின் பணி நிரந்தரத்தை எதிர்த்த மனுக்கள் அதிரடி தள்ளுபடி

மதுரை: மே.10–

மின்வாரிய ஒப்பந்த தொழிலாளர்கள் நிரந்தரத்தை எதிர்த்த மனுக்களை ஐகோர்ட் கிளை தள்ளுபடி செய்தது.மதுரை, தேனி, தூத்துக்குடி, விருதுநகர், திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் மின்சார வாரியத்தில் குழி தோண்டுதல், மின்கம்பிகள் அமைத்தல், பழுது நீக்குதல் போன்ற அத்தியாவசியப் பணிகளில் கடந்த 1998 முதல் 2014 வரை ஒப்பந்த பணியில் தொழிலாளர்கள் பலர் ஈடுபடுத்தப் பட்டனர். இவர்கள், தங்களுக்கு, தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் சட்டப்படி பணி நிரந்தரம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். இந்தக் கோரிக்கையை ஏற்றுத் தொழிலாளர் ஆய்வாளர் பணியாளர் களுக்கு நிரந்தர பணியாளர் அந்தஸ்து வழங்கி உத்தரவிட்டார்.

இதனை எதிர்த்து மின்சார வாரியத்தின் சார்பில், ஐகோர்ட் மதுரை கிளையில் பல்வேறு மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்குகள் அனைத்தையும் நீதிபதி பி.புகழேந்தி விசாரித்தார். மின்சார வாரியத்தின் சார்பில், ''ஒப்பந்த தொழிலாளர்கள் நேரடியாக வாரியத்தால் பணியமர்த்தப் படவில்லை. அவர்கள் ஒப்பந்ததாரர்கள் மூலமே நியமிக்கப் பட்டனர். பணி நிரந்தரம் கோரும் தொழிலாளர்கள் தொழிலாளர் நீதிமன்றத்தை தான் அணுக வேண்டும். தொழிலாளர் ஆய்வாளருக்கு இதற்கு அதிகாரம் இல்லை. இவர்கள் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டதால், பணி நிரந்தரச் சட்டத்தின் கீழ் இவர்களுக்குப் பலன் கிடைக்காது" என கூறப்பட்டது.

இதையடுத்து நீதிபதி, "பணி நிரந்தர சட்டத்தின் படி, ஒரு தொழிலாளி 480 நாட்கள் பணியாற்றினாரா என்பதை ஆய்வு செய்து அவருக்குப் பணி நிரந்தரம் வழங்கத் தொழிலாளர் ஆய்வாளருக்கு முழு அதிகாரம் உண்டு. தொழிலாளர்கள் மேற்கொண்ட குழி தோண்டுதல், மின் கம்பம் நடுதல் போன்ற பணிகள் கட்டுமானப் பணிகள் அல்ல. அவை மின்வாரியத்தின் நிரந்தரமான மற்றும் அத்தியாவசியப் பணிகள் ஆகும்.

இதேபோன்ற சூழலில் இருந்த ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற உத்தரவுப்படி பணி நிரந்தரம் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தொழிலாளர்களுக்கும் அதே பலனை வழங்குவது அவசியமானது. மின்சார வாரியம் தரப்பில் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்களைத் தள்ளுபடி செய்யப்படுகிறது" எனக் கூறி, தொழிலாளர் ஆய்வாளர் வழங்கிய பணி நிரந்தர உத்தரவுகள் உறுதி செய்யப்படுகிறது என உத்தரவிட்டார்.

# பிளஸ் 2 தேர்வில் 'ஸ்கிரைப்' மாணவர்கள் அதிகளவில் தோல்வி உதவியாளராக பட்டதாரி ஆசிரியர்கள் தேர்வு எழுதியதால் பின்னடைவு

மதுரை: மே.10–

பிளஸ் 2 தேர்வில் 'ஸ்கிரைப்' மாணவர்களுக்கு இந்தமுறை முதுநிலை ஆசிரியர்களுக்குப் பதிலாக பட்டதாரி ஆசிரியர்களை உதவியாளராக அமர்த்தி தேர்வை எழுத வைத்ததால் பெருமளவு மாணவர்கள் தோல்வி அடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அரசு பொதுத்தேர்வுகளில் பார்வைத்திறன் குறைபாடு, சிந்தனைக் குறைபாடு மற்றும் விபத்து காரணமாக கை பாதித்து எழுத முடியாத மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு உதவும் வகையில் ஆசிரியர் களே ஸ்கிரைப் உதவியாளர் களாக இருந்து தேர்வை எழுதுகிறார்கள்.

ஸ்கிரைப் ஆசிரியர்கள், மாணவர்கள் சொல்வதை மட்டுமே தேர்வில் எழுத வேண்டும். மாற்றுத் திறனாளி பிளஸ் 2 மாணவர்களுக்கு, அவர்கள் எழுதும் பாடப்பிரிவு முதுநிலை ஆசிரியர்களே கடந்த ஆண்டுவரை பிளஸ் 2 தேர்வு எழுதினர்.

குறைந்தபட்சம் மாணவர் எழுதும் பாடப்பிரிவு ஆசிரியர்கள் இல்லாவிட்டாலும், மற்ற பாடப்பிரிவு முதுநிலை ஆசிரியர்களையாவது நியமிப்பார்கள். பெரும்பாலும் ஸ்கிரைப் மூலம் தேர்வு எழுதும் மாற்றுத் திறனாளி மாணவர்கள், முறையாக படித்துவிட்டும், கேள்விகளைப் புரிந்து விடைகளைச் சொல்லும் சிந்தனைக் குறைபாடு உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

அதனால் மாணவர்கள் கேள்விகளுக்குச் சரியாகப் பதில் தெரியாவிட்டாலும், அவர்கள் சரியாகப் படிக்காமல் வந்தாலும், ஆசிரியர்களே அதனைச் சமாளித்து தேர்வு எழுதி அந்த மாணவர்களை வெற்றிபெற வைத்துவிடுவர்.

ஆனால், நடந்து முடிந்த பிளஸ் 2 தேர்வில், ஸ்கிரைப் மாணவர்களுக்கு அவர்கள் பாடப்பிரிவுக்கான முதுநிலை ஆசிரியர்களை ஸ்கிரைப்பராக போடாமல், பத்தாம் வகுப்புக்கு பாடம் நடத்தும் பட்டதாரி ஆசிரியர்களை ஸ்கிரைப்பராக நியமித்தனர்.

அவர்களுக்கு பிளஸ் 2 தேர்வு பாடத்துக்கான கேள்விகளுக்கு விடைகள் முழுமையாக தெரியாது. அந்தப் பாடத்திட்டத்துக்கான முழுமையான புரிதலும் இருக்காது. மாற்றுத் திறனாளிகள் என்ன சொல்கிறார்களோ அதை மட்டுமே ஸ்கிரைப் ஆசிரியர்கள் விடைத்தாளில் எழுதுவார்கள்.

அவர்களே சிந்தித்து விடைகளை எழுத மாட்டார்கள். பல மாணவர் கள் வழக்கம்போல் படிக்காமல், தேர்வுக்குத் தயாராகாமல் வந்ததால் அவர்கள் இந்த முறை தேர்வை சரியாக எழுதவில்லை.

அதனால், நேற்று வெளியான பிளஸ் 2 தேர்வில் ஸ்கிரைப் ஆசிரியர்களைக் கொண்டு தேர்வு எழுதிய மாற்றுத் திறனாளி மாணவர்கள் ஏராளமானோர் தோல்வியடைந்துள்ளனர் மாநகராட்சிப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள், அரசுப் பள்ளிகளில் இதுபோன்ற மாற்றுத் திறனாளி மாணவர்கள் தோல்வி அடைந்ததால் அப் பள்ளிகளின் தேர்ச்சி விகிதம் குறைந்ததற்கு முக்கியக் காரண மாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து முதுநிலை ஆசிரியர்கள் சிலர் கூறுகையில், "உதாரணமாக பொரு ளியல் பாடத் தேர்வுக்கு பத்தாம் வகுப்பு ஆசிரியர்களை ஸ்கிரைப்பராக அனுப்பியதால் அவர்களால் பதில் அளிக்க முடியவில்லை.

மாற்றுத் திறனாளி மாணவர்களும் சரியாக படிக்காமலும், படித் ததைச் சொல்லத் தெரியாமலும் இருப்பார்கள். இதற்கு முன்பு பொருளியல் பாடப்பிரிவு ஸ்கிரைப் ஆசிரியர்களே ஸ்கிரைப்பராகச் சென்றதால் மாணவர்களுக்கு மிகவும் துணையாக இருந்து பதில் தேர்வு எழுதி அவர்களைத் தேர்ச்சிபெற வைப்பார்கள்.

சில நேரங்களில் வழக்கமான மாணவர்களைவிட இந்த மாற்றுத் திறனாளி மாணவர்கள் அதிக மதிப்பெண் பெற்று வெற்றி பெற்று விடுவார்கள். இந்த முறை பொருளியல் பாடப்பிரிவில் அதிகமான ஸ்கிரைப் மாணவர்கள் தோல்விக்கு, ஸ்கிரைபராக தேர்வு எழுதிய பட்டதாரி ஆசிரியர்கள் சென்றதே காரணம்" என்றனர்.

# 11 வயது மகளை கொலை செய்து நாடகமாடிய தாய்

## விசாரணையில் வெளிவந்த அதிர்ச்சி தகவல்

விழுப்புரம், மே.10–

விழுப்புரம் மாவட்டம் கண்டாச்சிபுரம் அருகே உள்ள கெங்கவரம் ஊத்துக் கோட்டையை சேர்ந்தவர் முருகவேல். இவரது மனைவி சத்யா. இவர்களது மகள் வர்ஷினி (வயது 11). இவர் கண்டாச்சிபுரம் பகுதியில் உள்ள பள்ளியில் 6ம் வகுப்பு படித்து வந்தார். நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் வீட்டின் அருகே விளையாடி கொண்டிருந்த வர்ஷினி திடீரென் காணாமல் போயுள்ளார். உடனடியாக உறவினர்களுடன் அவரை தேடினர். அப்போது வர்ஷினி வீட்டில் அருகே உள்ள குடிசையில் வளையல் உடைக்கப்பட்ட நிலையில் உயிரிழந்து கிடந்தார்.. இத்தகவல் அறிந்த போலீசார் அங்கு விரைந்து சென்று வர்ஷினி உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். இது குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்த நிலையில் வர்ஷினியின் தந்தை முருகவேல் போலீசில் புகார் அளித்தார்.அதில் பெற்ற மகளை தாயே கொலை செய்து இருக்கலாம் என தெரிவித்திருந்தார். இதனை தொடர்ந்து வர்ஷினியின் தாய் சத்யாவிடம் போலீசார் விசாரணை நடத்தினார்கள். அப்பொது சத்யா கூறிய விசயன் போலீஸாரை அதிர்ச்சியடைய செய்தது. அவர் கூறுகையில், .'எனக்கும் எனது கணவருக்கும் கடந்த 10 ஆண்டுகளாக குடும்ப தகராறு இருந்து வந்தது. இதனால் மன உளைச்சலில் இருந்து வந்த நான் மகளை கொன்று விட்டு நானும் தற்கொலை செய்து கொள்ளலாம் என்ற எண்ணத்தில் இருந்து வந்தேன். அதன்படி எனது மகளை கொலை செய்வதற்காக வாயில் துணியை வைத்து அழுத்தி கழுத்தை நெறித்து கொலை செய்தேன். அதன் பின்னர் நான் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொள்ளலாம் என சென்றபோது மகள் துடிதுடித்து இறந்தது நினைவில் வந்தது. இதனால் நான் தற்கொலை செய்து கொள்ளும் முடிவை மாற்றிக் கொண்டேன். ஆனால் போலீசாரிடம் சிக்காமல் இருக்க எனது மகள் காதில் அணிந்திருந்த கம்மல்களை கழற்றி அருகே உள்ள பள்ளி வளாகத்தில் குப்பையில் தூக்கி எறிந்து விட்டேன். மேலும் வீட்டில் மகளின் வளையல்களை உடைத்து போலீசாருக்கு சந்தேகம் வராத வகையில் ஏற்பாடு செய்து விட்டு பக்கத்தில் உள்ள இன்னொரு வீட்டுக்கு சென்று விட்டேன். பின்னர் சிறிது நேரம் கழிந்து மகளை தேடுவது போல் தேடி மகளை நகைத்காத கொள்ளையர்கள் கொலை செய்து விட்டதாக நாடகம் ஆடினேன்' இவ்வாறு போலீசில் கூறி உள்ளார். இதனை தொடர்ந்து சத்யாவை போலீசார் கைது செய்தனர். பின்னர் அவர் வேடம்பட்டு சிறையில் அடைக்கப் பட்டார். பெற்ற மகளை தாய் கொலை செய்து நாடகமாடிய சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.",

## சதுர்முக பிம்ப பஞ்ச கல்யாண பெருவிழா..!



திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த கீழ் சாத்தமங்கலம் கிராமத்தில் ஸ்ரீமத்தேவாதி தேவ பகவான் 1008 ஸ்ரீ சந்திர பிரப தீர்த்தங்கரர் மற்றும் சதுர்முக பிம்ப பஞ்ச கல்யாண பெருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்த வைபவத்தில் ஏராளமான ஜைனர்கள் பங்கேற்றனர். மேலும் இந்த பெருவிழாவில் குதிரை, யானை மீது கலச நீர் எடுத்து வரப்பட்டு ஜென்ம அபிஷேகம் நடைபெற்றது.

# "விஜய் ஆட்சி அமைத்தால் தமிழகத்துக்கே பேரழிவு : டிடிவி தினகரன் காட்டம்



சென்னை: மே.10–

"முதல்வராகி ஊழலை ஒழிப்போம் என்று சொல்பவர்கள், முதல்வராகவே ஃபோர்ஜரி செய்கிறார்கள். ஒரு எம்எல்ஏ தானே என மிரட்ட நினைத்திருக்கலாம். குதிரை பேரம் செய்யவே இப்படி செய்திருக் கின்றனர்" என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.

சென்னையின் அவர் இன்று அடையாறில் இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "காமராஜ் கையெழுத்திட்டதாக வெளியான வீடியோ எங்கு எடுக்கப்பட்டது? காமராஜ் கையெழுத்திடுவது போன்ற வீடியோவை எடுத்தது யார்? விஜய்யா, ஆனந்தா, செங்கோட்டையனா?

அந்த வீடியோ ஏஐ ஆக கூட இருக்கலாம். ஏஐ மூலம் என்ன வேண்டுமானாலும் உருவாக்கலாம். நகல் கடிதத்தை ஆளுநரிடம் கொடுத்தபோது, அசல் கடிதம் எங்கே என அவர் கேட்டிருக்கிறார். அதற்கு தவெகவினர் தருவதாக சொல்லிவிட்டு வந்துவிட்டனர். அது மோசடி வீடியோ என ஆளுநரிடம் கூறிவிட்டோம்.

முதல்வராகி ஊழலை ஒழிப்போம் என்று சொல்பவர்கள், முதல் வராகவே ஃபோர்ஜரி செய்கிறார்கள். தவெகவினர் என்னை மிரட்ட, பயமுறுத்தப் பார்க்கின்றனர். எனது ஒப்புதலுடன் கடிதம் கொடுக்கப்பட்டதாகக் கூறி குழப்பத்தை ஏற்படுத்த பார்க்கின்றனர். என்னை பயமுறுத்தலாம் என பார்க்கின்றனர். எவ்வளவோ நெருக்கடிகளைப் பார்த்தவன் நான். போலி ஆதரவு கடிதம் விவகாரத்தை சும்மா விடமாட்டேன்.

தீயசக்தி எல்லாம் தாண்டி தற்போது தவெக தமிழ்நாட்டுக்கு அழிவு சக்தியாக வந்து நிற்கிறது. தமிழ்நாட்டை அழிக்க வந்த சக்தி. ஆட்சிக்கு வரும் முன்பே திமிராக, அகங்காரமாக ஒரு எல்எல்ஏ தானே என மோசடி கடிதம் தருகிறார்கள்.

ஒரு எம்எல்ஏ தானே என மிரட்ட நினைத்திருக்கலாம். குதிரை பேரம் செய்யவே இப்படி செய் திருக்கின்றனர். விஜய் ஆட்சி அமைத்தால், அது தமிழகத்துக்கு பேரழிவை ஏற்படுத்தும். ஆட்சி அமைக்கவே இவ்வளவு ஃபோர்ஜரி வேலைகள் செய்கிறார்கள்" என்று தினகரன் கூறினார்.

# சேலம் ஜவுளி பூங்கா திட்டத்தை கண்டிப்பாக முடக்குவோம்
## தவெக சேலம் புது எம்எல்ஏ அறிவிப்பு

சேலம். மே. 10–

தமிழக அரசியலில் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் களம் இறங்கியுள்ள தமிழக வெற்றிக் கழகம்(TVK)தனது முதல் சட்டமன்றப் பிரதிநிதித்துவத்தின் மூலமே பெரும் விவாதங்களைக் கிளப்பியுள்ளது.

சேலம் மேற்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எஸ். லட்சுமணன், தனது முதல் ஊடக சந்திப்பிலேயே வெளியிட்டுள்ள அதிரடி அறிவிப்பு சேலம் மாவட்ட மக்களிடையே அதிர்ச்சியையும், அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.



ஜவுளி பூங்கா திட்டத்திற்கு முட்டுக்கட்டை

கடந்த திமுக ஆட்சிக் காலத்தில் சேலம் மாவட்டத்தின் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் கொண்டு வரப்பட்ட மிக முக்கியமான திட்டம் 'சேலம் ஜவுளி பூங்கா' (Salem Textile Park). இதற்கான ஆரம்பக்கட்டப் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வந்த நிலையில், எம்.எல்.ஏ லட்சுமணன் இதனை உடனடியாக நிறுத்தப் போவதாக அறிவித்துள்ளார். "எனது முதல் மற்றும் முதன்மையான நோக்கம், சேலம் ஜவுளி பூங்காவில் தற்போது நடைபெற்று வரும் அனைத்துப் பணிகளையும் உடனடியாக நிறுத்துவதுதான்" என்று அவர் திட்டவட்டமாகத் தெரிவித் துள்ளார்.

ஒருசட்டமன்றஉறுப்பினரின் முதல் முன்னுரிமை தொகுதி வளர்ச்சி சார்ந்ததாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், ஏற்கனவே நடைமுறையில் உள்ள ஒரு உற்பத்தி சார்ந்த (Manufac turing sector) திட்டத்தை முடக்குவதே தனது லட்சியம் என்று அவர் கூறியிருப்பது சமூக வலைதளங்களில் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகி வருகிறது.

தொடர் தோல்விகளில் சேலம் உள்கட்டமைப்பு

சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை, கடந்த சில ஆண்டுகளாகவே பெரிய அளவிலான உள்கட்டமைப்பு மற்றும் தொழில் திட்டங்கள் பல்வேறு அரசியல் காரணங்களால் முடக்கப்பட்டு வருகின்றன.

சென்னை சேலம் எட்டு வழிச்சாலை: விவசாயிகளின் எதிர்ப்பு மற்றும் அரசியல் அழுத்தங்களால் இந்த பிரம்மாண்டமான விரைவுச் சாலைத் திட்டம் கிட்டத்தட்ட கைவிடப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டது. இது சேலத்தின் போக்குவரத்து இணைப்பை உலகத் தரத்திற்கு உயர்த்தும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இது திமுக அரசால் கைவிடப்பட்டது. அதன்பின் இதை எக்ஸ்பிரஸ் வே போல அல்லாமல் தனிமைப்படுத்தப் பட் சாலைகளாக கொண்டு வரும் திட்டங்கள் நடந்து வருகின்றன.

சேலம் விமான நிலைய விரிவாக்கம்: நிலம் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட சிக்கல்கள் மற்றும் உள்ளூர் அரசியல் நிலைப்பாடுகளால் விமான நிலைய விரிவாக்கப் பணிகளும் மந்தகதியிலேயே உள்ளன. இதனால் சேலத்திற்கான விமான போக்குவரத்து சேவை இன்னும் முழுமையான வளர்ச்சியை எட்டவில்லை.

தற்போது ஜவுளி பூங்கா: மேற்கண்ட இரு பெரும் திட்டங்களும் முடங்கிய நிலையில், சேலத்தின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும், ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கவும் உதவும் ஒரே நம்பிக்கையாக இந்த ஜவுளி பூங்கா பார்க்கப்பட்டது. இப்போது அதற்கும் புதிய எம்.எல்.ஏ மூலம் ஆபத்து வந்துள்ளதாகக் கருதப்படுகிறது.

வளர்ச்சியா? அரசியலா? வாக்காளர்களின் குமுறல்

சேலம் மாநகரப் பகுதி வாக்காளர்கள், குறிப்பாக கல்வி கற்ற நடுத்தர வர்க்கத்தினர், இத்தகைய சட்டமன்ற முன்னுரிமைகளைக் கண்டு அதிருப்தியில் உள்ளனர். "மாற்றத்தை விரும்பி வாக்களித்த சேலம் நகர வாக்காளர்களுக்கு இதுதான் பரிசா?" என்ற கேள்வி எழுந்துள்ளது. ஒரு புறம் அண்டை மாவட்டங்களான கோயம்புத்தூரும், ஈரோடும் தொழில் துறையில் அசுர வளர்ச்சி கண்டு வரும் நிலையில், சேலம் மட்டும் ஏன் பின்னோக்கிச் செல்கிறது என்ற ஆதங்கம் மக்களிடையே எழுந்துள்ளது.

தொழில் முதலீடுகள் இல்லாத ஒரு நகரில் வேலைவாய்ப்பு என்பது எட்டாக்கனியாகிவிடும். ஜவுளி பூங்கா போன்ற ஒரு பெரிய உற்பத்தித் திட்டம் நிறுத்தப்பட்டால், அது அந்த மாவட்டத்தின் ஒட்டுமொத்த ஜிடிபி (GDP) வளர்ச்சியைப் பாதிப்பதோடு மட்டுமல்லாமல், பிற முதலீட்டாளர்களையும் சேலம் பக்கம் வர அச்சப்பட வைக்கும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மக்களின் நலனுக்காகவும், வாழ்வாதாரத்திற்காகவும் போராடுவது இயல்பு. ஆனால், வளர்ச்சித் திட்டங்களை முடக்குவதையே பிரதான நோக்கமாகக் கொள்வது நீண்டகால அடிப்படையில் மாவட்டத்திற்குப் பாதிப்பையே ஏற்படுத்தும். தமிழக வெற்றிக் கழகத்தின் இந்த நிலைப்பாடு அந்த கட்சியின் எதிர்கால வளர்ச்சிக்கு உதவுமா அல்லது சேலத்தின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

சேலத்தின் வளர்ச்சி கனவுகள் மீண்டும் ஒருமுறை அரசியல் சூறாவளியில் சிக்கித் தவிக்கின்றன.



பாஜக முதலியார் பேட்டை தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஜான் குமார், திருமதி.லதா ஜான் குமார் அவர்களை லட்சிய ஜனநாயக கட்சியின் தலைவரும் காமராஜ் நகர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரான ஜோஸ் சார்லஸ் மார்டின் அவர்கள் பொன்னாடை அணிவித்து பூங்கொத்து வழங்கி வாழ்த்து பெற்றார் .

# Bridges Learning Vidyalaya பள்ளியில் இந்த ஆண்டும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 100% தேர்ச்சி பெற்று சாதனை



புதுச்சேரி, மே. 10–

புதுச்சேரி தந்தை பெரியார் நகரில் செயல்பட்டு வரும் Bridges Learning Vidyalaya பள்ளியில் இந்த ஆண்டும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 100% தேர்ச்சி பெற்று சாதனை தொடர்கிறது.

இதை பற்றி பள்ளி தாளாளர் புவனா வாசுதேவன் கூறுகையில், பல ஆண்டுகளாக பள்ளியுடன் பயணித்து வந்த மாணவர்கள் இன்று உயரிய வெற்றியை அடைந்துள்ளனர். கண்ணீர், கவலை, "என் குழந்தையின் எதிர்காலம் என்ன ஆகும்?" என்ற பெற்றோரின் மன அழுத்தம் ஆகியவற்றிலிருந்து இன்று வெற்றியின் உச்சியை எட்டியுள்ள இந்த மாணவர்களின் பயணம் அனைவரையும் நெகிழச் செய்கிறது.

சிறுவர் பருவத்திலிருந்து வளர் இளம் பருவம் வரை நியூரோ டைவர்ஸ், சுமாராக கற்போர், மெதுவாக கற்போர், மற்றும் அசாதாரண திறன்கள் கொண்ட குழந்தைகளின் வளர்ச்சி, தன்னம்பிக்கை, சமூக பழக்கம், கல்வி முன்னேற்றம் ஆகியவை Bridges Learning Vidyalaya வின் தனித்துவமான வழிகாட்டுதலால் உருவாகியுள்ளதாக பெற்றோர்கள் மகிழ்ச்சியுடன் பகிர்ந்துகொண்டனர்.

இப்பள்ளியின் பெற்றோர்கள் பகிர்கையில், "இந்த குழந்தைகள் மதிப்பெண்களில் மட்டும் அல்லாமல், மனிதநேயம், ஒற்றுமை, பரிவு, தலைமைத்திறன், தன்னம்பிக்கை ஆகியவற்றிலும் சிறந்து விளங்குகின்றனர். மாணவர்கள் ஒருவரை ஒருவர் சகோதரர், சகோதரிகளாக நேசித்து வளர்வது எங்களை பெருமைப்பட வைக்கிறது. சவால்கள் நிறைந்த கேள்விக்குறி நிலையிலிருந்து வெற்றிகரமான வாழ்க்கைப் பயணத்திற்குச் சென்றுள்ள ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமான சாதனையாளர்கள்" என்று தெரிவித்தார்.

மேலும் பெற்றோர்கள், "Bridges உடன் இணைந்த பிறகு எங்கள் குழந்தைகளின் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டது. கல்வி மட்டுமின்றி ஒழுக்கம், சமூக பழக்கம், பொறுப்பு உணர்வு, தன்னம்பிக்கை ஆகிய அனைத்திலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது" என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளி நிர்வாகம் இணைந்து கொண்டாடிய இந்த வெற்றி விழா உற்சாகமான மற்றும் உணர்ச்சிபூர்வமான தருணமாக அமைந்தது.

# இன்று ஐபிஎல் போட்டி: மெட்ரோ ரயில்களில் ரசிகர்களுக்கு இலவச பயணம்

சென்னை: மே.10–

சென்னையில் நடைபெறும் ஐபிஎல் போட்டியைக் காண வரும் ரசிகர்களின் வசதிக்காக, போட்டி நடைபெறும் நாளன்று மெட்ரோ ரயில்களில் இலவசமாக பயணிக்கலாம் என்று சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: நடப்பு ஐபிஎல் தொடரின் 53வது லீக் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணிகள் மே 10ம் தேதி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் மோதவுள்ளன.

இதையொட்டி, ரசிகர்களுக்கு தடையற்ற பயண அனுபவத்தை வழங்கும் நோக்கில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சிஎஸ்கே உடன் இணைந்து சிறப்பு ஏற்பாடு செய்துள்ளது.

அதன்படி, மே 10 அன்று நடைபெற உள்ள போட்டிக்கான ஸ்பான்சர் டிக்கெட் (நுழைவுச் சீட்டு) வைத்திருக்கும் ரசிகர்கள், சென்னையில் செயல்பாட்டில் உள்ள எந்தவொரு மெட்ரோ ரயில் நிலையத்திலிருந்தும் மைதானத்துக்கு அருகிலுள்ள அரசினர் தோட்டம் மெட்ரோ நிலையத்துக்கு எவ்வித கட்டணமும் இன்றி பயணிக்கலாம். ரசிகர்கள் தங்களின் நுழைவுச்சீட்டில் உள்ள பிரத்தியேக க்யூஆர் குறியீட்டை மெட்ரோ நிலையங்களில் உள்ள தானியங்கி நுழைவு இயந்திரத்தில் ஸ்கேன் செய்து பயணத்தைத் தொடங்கலாம். இந்தச் சலுகையானது ஒருமுறை சென்று வருவதற்கான இரண்டு நுழைவு மற்றும் இரண்டு வெளியேறுதல்களை உள்ளடக்கியது. மேலும், போட்டி நடைபெறும் நாளன்று மெட்ரோ ரயில் சேவைகள் ஞாயிற்றுக்கிழமை கால அட்டவணையின்படி இயக்கப்படும்.

ரசிகர்கள் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருவள்ளூரில் தமிழக வெற்றி கழகத் தலைவர் விஜய்யை ஆட்சி அமைக்க அழைக்காத தமிழக ஆளுநரையும் கண்டித்து காங்கிரஸ் கட்சி சார்பில் மழைக்கு இடையே கண்டன ஆர்ப்பாட்டம்



திருவள்ளூர் மே 10

திருவள்ளூர் அரசு மருத்துவ கல்லூரி சாலையில் தமிழக வெற்றி கழகம் தனிபெரும் கட்சியாக வெற்றி பெற்ற நிலையில் ஆட்சி அமைக்க கூடாது என்ற நோக்கத்தோடு செயல்படும் மத்திய அரசையும், அதன் கைப்பாவையாக செயல்படும் வகையில் தமிழக வெற்றி கழகத் தலைவர் விஜய்யை ஆட்சி அமைக்க அழைக்கவில்லை என தமிழக ஆளுநரையும் கண்டித்து காங்கிரஸ் கட்சி சார்பில் மழைக்கு இடையே கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர்கள் சசிகுமார்(வடக்கு), காங்கை குமார்(தெற்கு) ஆகியோர் தலைமை தாங்கினார்.மக்களவை தொகுதி பொறுப்பாளர் ஏ.சி.சிதம்பரம் முன்னிலை வகித்தார்.

அப்போது, தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தமிழக வெற்றி கழகம் தனிப்பெரும் கட்சியாக வெற்றி பெற்றுள்ளது. இந்த நிலையில் அந்த கட்சியை ஆட்சி அமைக்கக்கூடாது என்று இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கும், வாக்களித்த தமிழக மக்களுக்கும் எதிராகவும் செயல்படும் மத்திய அரசையும், அதன் கைப்பாவையாக செயல்படும் தமிழக ஆளுநரையும் கண்டித்து காங்கிரஸ் கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் மாநில துணைத்தலைவர் ஏகாட்டூர் ஆனந்தன், மாநில இளைஞர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திவாகர், ஓபிசி அணி மாநில செயல் தலைவர் ஜே.கே.வெங்கடேசன், நகர் தலைவர் ஸ்டாலின், கடம்பத்தூர் வட்டார தலைவர் என்.டி.சதீஷ், முன்னாள் ஊராட்சி தலைவர் சதா பாஸ்கரன், நிர்வாகிகள் அருள் உள்ளிட்ட அந்தக் கட்சியினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# கோயில் சொத்துகளை பாதுகாக்க வேண்டிய அதிகாரிகள் தவறு இழைக்கக் கூடாது: ஐகோர்ட் நீதிபதி அறிவுரை

சென்னை: மே.10–

கோயில் சொத்துகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் உள்ள அதிகாரிகள் அதில் தவறு இழைக்கக்கூடாது என அறநிலையத்துறைக்கு உயர் நீதிமன்றம் அறிவுரை வழங்கியுள்ளது.

இதுதொடர்பாக திருத்தொண்டர் அறக்கட்டளை தலைவரான சேலம் ஏ.ராதாகிருஷ்ணன், சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், 'சென்னை மயிலாப்பூரில் உள்ள கபாலீஸ்வரர் கோயிலில் ஆண்டுதோறும் நடத்தப்படும் அறுபத்து மூவர் உலா மற்றும் பிரம்மோற்சவம் போன்ற திருவிழாக்களின் வரவு செலவு கணக்கு விவரங்களை இந்து சமய அறநிலையத் துறையின் தணிக்கை பிரிவு அதிகாரிகள் தணிக்கை செய்து அறிக்கை அளித்துள்ளனர்.

அதில் கோயில் நிர்வாகத்தில் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளதாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக பலமுறை புகார் அனுப்பியும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே, இதுதொடர்பாக உரிய விசாரணை நடத்த அறநிலையத்துறைக்கு உத்தரவிட வேண்டும்' என கோரியிருந்தார். இந்த வழக்கு நீதிபதி எம்.தண்டபாணி முன்பாக விசாரணைக்கு வந்தது.

அப்போது, மனுதாரரின் புகார் பரிசீலிக்கப்பட்டு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும், என அறநிலையத் துறை தரப்பில் உறுதியளிக்கப்பட்டது. அதையடுத்து நீதிபதி, "அறநிலையத்துறையின் தணிக்கை குழு கோயில் நிர்வாகத்தில் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளது என குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது.

அந்த குற்றச்சாட்டுகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது அறநிலையத் துறை ஆணையரது கடமை. குற்றச்சாட்டுகளின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பது சட்டப்பூர்வ கடமையை துறப்பதற்கு சமம்.

கோயில் சொத்துகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் உள்ள அதிகாரிகள் அதில் தவறு இழைக்கக்கூடாது. எனவே, மனுதாரரின் புகாரை 12 வார காலத்துக்குள் பரிசீலித்து சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என அறிவுறுத்தி, வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டுள்ளார்.

# விஜய் முதல்அமைச்சராவதில் தொடரும் சிக்கல் தவெக நிர்வாகி தீக்குளித்து தற்கொலை முயற்சி

நெல்லை, மே.10–

நெல்லை மாவட்டம் செட்டிகுளம் அருகேயுள்ள புதுமை கிராமத்தைச் சேர்ந்தவர் இசக்கியப்பன் (47 வயது). இவர் தமிழக வெற்றி கழகத்தின் கிளைக் கழக செயலாளராகப் பணியாற்றி வருகிறார். கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு, தனது கட்சியின் தலைவர் விஜய் தமிழக முதல்அமைச்சராக வேண்டி, சுமார் 16 அடி நீளம் கொண்ட வேலை அலகாகக் குத்திக் கொண்டு நேர்த்திக்கடன் செலுத்தித் தனது தீவிரப் பற்றை வெளிப்படுத்தினார்..இந்த நிலையில் தற்போது தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய், முதல் அமைச்சராக முடியாத சூழல் நிலவி வருவதால் மனமுடைந்த இச்கியப்பன், நேற்று திடீரென உடலில் மண்ணெண்ணெய் ஊற்றித் தீக்குளிக்க முயன்றார். இதில் பலத்த காயமடைந்த அவர், அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் மீட்டு ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்தனர்.. இசக்கியப்பன் தற்போது உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மு.க.ஸ்டாலின் தோல்வியடைந்ததால் விரக்தி: திமுக நிர்வாகி தூக்குப்போட்டு தற்கொலை

நாமக்கல், மே.10–

நாமக்கல் மாவட்டம் எருமப்பட்டி அருகே உள்ள அலகானத்தம் பிரிவு பகுதியை சேர்ந்தவர் கருணாநிதி (69 வயது). திமுக நிர்வாகி. இவரது மனைவி ஈஸ்வரி உடல்நலக்குறைவால் கடந்த 3ந்தேதி இறந்து விட்டார்..இந்த நிலையில் கடந்த 4ந்தேதி தமிழக சட்டசபை தேர்தல் வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. அப்போது தேர்தலில் கொளத்தூர் தொகுதியில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தோல்வி அடைந்தார். மு.க.ஸ்டாலின் தோல்வி அடைந்ததை கருணாநிதியால் தாங்க முடியவில்லை. இதையடுத்து அவரை மகனும், மகள்களும் தேற்றினர். இருந்தாலும் மனமுடைந்து விரக்தியில் காணப்பட்ட கருணாநிதி நேற்று வீட்டின் கழிவறையில் உள்ள கம்பியில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்..இதுகுறித்து தகவல் கிடைத்ததும் எருமப்பட்டி போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். பின்னர் அவரது உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் கருணாநிதி தற்கொலை தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்."

# ஈரோடு அருகே கனமழை காரணமாக வீட்டின் சுவர் இடிந்து விழுந்து பெண் உயிரிழப்பு

ஈரோடு: மொடக்குறிச்சி அடுத்த குமராயி வலசு பகுதியில் வீட்டின் சுவர் இடிந்து விழுந்து பெண் உயிரிழந்தார். கனமழை காரணமாக சுவர் இடிந்து விழுந்ததில் இடிபாடுகளில் சிக்கி கலைவாணி(32) உயிரிழந்தார்.



என்.ஆர். காங்கிரஸ் தலைவர் முதலமைச்சர் ரங்கசாமி அவர்களை லட்சிய ஜனநாயக கட்சியின் தலைவரும் காமராஜ் நகர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினருமான ஜோஸ் சார்லஸ் மார்டின் அவர்கள் பொன்னாடை மற்றும் பூங்கொத்து வழங்கி மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார். உடன் முதலியார்பேட்டை தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் ஜான் குமார் உடன் இருந்தார்.

# தவெக அமைச்சரவையில் 2 இடங்கள் ஒரு ராஜ்யசபா சீட் கேட்டு உள்ளோம்: செல்வப்பெருந்தகை பேட்டி

சென்னை: மே.10–

தவெக அமைச்சரவையில் 2 இடங்கள், 1 மாநிலங்களவை உறுப்பினர் வேண்டும் என கேட்டு உள்ளோம். என்று செல்வப் பெருந்தகை தெரிவித்துள்ளார். சென்னையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை நேற்று நிருபர்களிடம் கூறியதாவது: தேர்தலில் பெரும்பான்மை பெற்ற கூட்டணியை ஆட்சியமைக்க ஆளுநர் உடனடியாக அழைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. எங்கள் போராட்டத்திற்கும், கூட்டணித் தலைவர்களின் கோரிக்கைக்கும் செவிசாய்த்து, ஆளுநர் தற்போது தவெக தலைவர் விஜய் ஆட்சியமைக்க அழைக்க வேண்டும். ஆளுநரின் நடவடிக்கைகளில் பாஜவின் தலையீடு இருந்ததால் ஆட்சியமைப்பதில் இரண்டு நாட்கள் தாமதம் ஏற்பட்டது.



காங்கிரஸ் கட்சி கூட்டணிக் கட்சிகளின் முதுகில் குத்திவிட்டதாகக் திமுகவால் கூறப்படும் விமர்சனங்களில் எவ்வித உண்மையும் இல்லை. சிபிஐ, சிபிஎம் மற்றும் விசிக உள்ளிட்ட கட்சிகள் தங்களது கொள்கை மற்றும் தேச நலன் அடிப்படையில் முடிவுகளை எடுத்துள்ளன. அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைந்துள்ளோம். இதில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வதுதான் கூட்டணிக்கான அறம். சிபிஐ மற்றும் சிபிஎம் கட்சிகள் நிபந்தனையற்ற வெளியிலிருந்து ஆதரவு தருவதாக அறிவித்துள்ளன.

தவெக அமைச்சரவை யில் காங்கிரஸ் கட்சிக்கு 2 அமைச்சர் பதவிகளும், 1 மாநிலங்களவை உறுப்பினர் பதவி வேண்டும் என தெரிவித்துள்ளோம். யார் அமைச்சரவையில் இடம் பெறுவார்கள் என்பது குறித்து கட்சியின் அகில இந்தியத் தலைமை மற்றும் மல்லிகார்ஜுன கார்கே ஆகியோர் தீவிரமாக ஆலோசித்து வருகின்றனர். விரைவில் இதுகுறித்த அதிகாரப்பூர்வ முடிவு அறிவிக்கப்படும். குதிரை பேரம் நடப்பதாக வெளியாகும் தகவல்கள் முற்றிலும் வதந்தியே. ஆட்சி அதிகாரத்தில் பங்கெடுப்பது என்பது ஜனநாயகத்தின் அடிப்படைத் தத்துவமாகும். அந்த வகையில் கூட்டணிக் கட்சிகள் ஆட்சி அதிகாரத்தில் பங்கெடுப்பது வரவேற்கத்தக்கது.தேர்தல் கவரேஜ்

ஜனநாயகத்தைப் பாதுகாக்க அறவழியில் போராடலாமே தவிர, இத்தகைய வன்முறைச் செயல்களில் ஈடுபடக் கூடாது. இதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்ற நிலை வரக்கூடாது. காவல்துறை உடனடியாகத் தலையிட்டு வன்முறையாளர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். கூட்டணிக்குள் இந்தி திணிப்பு மற்றும் மும்மொழிக் கொள்கை குறித்த கேள்விகள் எழுகின்றன.

புதியதாக உருவாகியுள்ள அரசு, இந்தியைத் திணிக்கக் கூடாது என்பதே காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடு. இந்தி கற்க விரும்புபவர்கள் கற்கலாம், ஆனால் அதை யார் மீதும் திணிக்கக் கூடாது. தமிழ்நாடு நீண்ட காலமாக இருமொழிக் கொள்கையையே பின்பற்றி வருகிறது, அதுவே தொடர வேண்டும். தற்போதைய இந்த அரசியல் கூட்டணி, வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தல்கள் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களிலும் வெற்றிகரமாகத் தொடரும் என உறுதியாக நம்புகிறோம். இவ்வாறு செல்வப்பெருந்தகை கூறினார்.

# “திருமாவளவன் தவெகவுக்கு ஆதரவு அளிக்க வேண்டும்”: ராமதாஸ் கோரிக்கை

சென்னை: மே.10–

தமிழகத்தின் நலன் கருதி தமிழக மக்களுக்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் அரசியல் செய்து வருகின்ற விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் தவெகவுக்கு ஆதரவை அளிக்க வேண்டும் என பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “2026 தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தலில் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களைப் பிடித்து தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்திருந்தாலும் ஆட்சி அமைக்க தேவையான 118 இடங்கள் கிடைக்காததால் தமிழக ஆளுநர் விஜய்யை ஆட்சி அமைக்க அழைக்கவில்லை.

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் தமிழகத்தில் உள்ள பல கட்சிகளிடம் ஆதரவு நல்கியதில் அதில் அகில இந்திய காங்கிரஸ் கட்சியும், இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிய கம்யூனிஸ்ட் அவர்களது ஆதரவு கடிதங்களை கொடுத்துள்ளது. இந்த ஆதரவுகளை கொடுத்தும் தமிழக ஆளுநர் 118 உறுப்பினர்களுக்கான ஆதரவுக் கடிதங்களை கொடுத்தால் தான் ஆட்சி அமைக்க முடியும் என்று திரும்பத் திரும்ப திருப்பி அனுப்புவது ஆளுநர் ஏதோ ஒரு உள்நோக்கத்தில் இருப்பது தெரிகிறது.

ஆளுநரை வைத்து பின்புலத்தில் இருந்து கொண்டு பாஜக ஆளுநரை இயக்குவதாக பெரும்பான்மையான மக்களால் பேசப்பட்டு வருகிறது. மக்கள் தீர்ப்புக்கு தலை வணங்க வேண்டியது அனைவரின் கடமையாகும். அந்த கடமையை மதித்து தமிழகத்தில் தற்போது நிலவி வரும் அசாதாரண சூழ்நிலையை மனதில் கொண்டு தமிழகத்தில் தனிப்பெரும் கட்சியாக உள்ள தவெக வை ஆட்சி அமைக்க ஆளுநர் அழைக்க வேண்டும். இதை தாமதப்படுத்தக் கூடாது. உடனே அழைக்க வேண்டும்.

தமிழக வெற்றிக் கழகத்திற்கு, திராவிட முன்னேற்றக் கழக கூட்டணியில் இருந்து வெற்றி பெற்ற காங்கிரஸ், மார்க்சிய கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் போன்ற கட்சிகள் தமிழக நலன் கருதி ஆதரவளித்துள்ள நிலையில், தமிழகத்தின் நலன் கருதி தமிழக மக்களுக்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் அரசியல் செய்து வருகின்ற விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் தமிழக வெற்றிக் கழகத்திற்கு ஆதரவை அளிக்க வேண்டும். அவரது ஆதரவை அளிக்கும் பட்சத்தில் தமிழக ஆளுநர் விஜயை அழைத்து தமிழக முதல்வராக பதவி பிரமாணம் செய்து வைக்க வேண்டும்.

இப்போது உள்ள சூழ்நிலையை மனதில் கொண்டு தம்பி திருமாவளவன் உடனடியாக தமிழக வெற்றிக் கழகத்திற்கு ஆதரவளித்து தமிழக மக்களின் உணர்வுகளை மதித்து தமிழகத்தில் ஒரு புதிய ஆட்சியை ஏற்படுத்தி ஒரு மாற்றத்தை தமிழக மக்கள் இடத்தில் கொண்டு வந்து தமிழக மக்களின் முன்னேற்றத்திற்கு அவர் அளிக்கின்ற ஆதரவைக் கொண்டு அமைய உள்ள தமிழக அரசை சிறப்பாக செயல்படுத்த ஆலோசனைகள் வழங்கிட வேண்டும் என்பதை வேண்டுகோளாக வைக்கிறேன்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# திருவள்ளூர் மாவட்டத்தில் 11 ம் தேதி முதல் மக்கள் குறைதீர் கூட்டம் நடைபெறும்

## மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தகவல் :

திருவள்ளூர் மே 10 : தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் தேர்தலையொட்டி, நடத்தை விதிமுறைகள் அமலில் இருந்த நிலையில், தற்போது தளர்வு செய்யப்பட்டு, வரும் திங்கட்கிழமை (மே 11) முதல் மாவட்ட மக்கள் குறைதீர் கூட்டம் வழக்கம் போல் நடைபெறும் என ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் 2026ம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் நடத்தை விதிகள், இந்திய தேர்தல் ஆணையத்தினால் தளர்வு செய்யப்பட்டதையடுத்து, திருவள்ளூர் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தலைமையில் பிரதி வாரம் திங்கட்கிழமை அன்று நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டமானது மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் எதிர்வரும் 11.05.2026 முதல் காலை 10 மணி அளவில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் பொதுமக்கள் தங்கள் கோரிக்கை தொடர்பான மனுக்களை அளித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

# 2025-26 நிதியாண்டில் மதுரை ரயில்வே கோட்டம் ரூ.1,408.69 கோடி வருமானம் ஈட்டி புதிய சாதனை

மதுரை: மே.10–

மதுரை ரயில்வே கோட்டத்தில் 202526ஆம் நிதியாண்டில் மொத்த வருமானம் ரூ.1,408 கோடியாக உயர்ந்திருப்பதாக தெற்கு ரயில்வே அறிவித்து உள்ளது. 202526ஆம் நிதியாண்டில் மதுரை ரயில்வே கோட்டத்திற்கு கிடைத்துள்ள இந்த அதிக வருமானம் கடந்தாண்டை காட்டிலும் (ரூ.1,245 கோடியை விட) 13 சதவீதம் அதிகம் ஆகும்.

கடந்த நிதியாண்டில் மதுரை ரயில்வே கோட்டத்திற்கு மொத்தம் ரூ.1,408 கோடி வருமானம் கிடைத்துள்ள நிலையில், இதில் பயணிகள் பயணச்சீட்டு விற்பனை மூலம் மட்டும் ரூ.886.32 கோடி வருவாய் பதிவாகி இருக்கிறது. அதே நேரம் சரக்கு போக்குவரத்து மூலம் ரூ.411 கோடி வருவாய் கிடைத்து உள்ளது. இது நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட 10% அதிகமாகும்.

இதர வருமானங்கள் என்கிற வகையில் பயணச்சீட்டு பரிசோதனை மூலம் ரூ.12.73 கோடி வசூலாகியுள்ளது. 97 சதவீத ரயில்களில் பயணச்சீட்டு பரிசோதனை நடத்தப்பட்டு, பயணச்சீட்டு இல்லாதோர் மற்றும் ரயில்வே சட்ட விதிகளை மீறியவர்களிடம் அபராதமாக ரூ.12.73 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது . உணவகச் சேவைகள் (Catering) மூலம் ரூ.7.92 கோடி வருவாய் கிடைத்துள்ளது, இது முந்தைய ஆண்டை விட 95.70% அதிகம் ஆகும். பார்சல் சேவைகள் மூலம் ரூ.10.78 கோடி வருமானம் கிடைத்துள்ளது.பழைய இரும்பு பொருட்கள் (ஸ்கிராப்) விற்பனை மூலம் ரூ.27.38 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இந்த வருவாயானது தெற்கு ரயில்வே நிர்வாகம் நிர்ணயித்த ரூ.1,340 கோடி என்ற இலக்கை விட 5% கூடுதல் என்பது குறிப்பிடத்தக்கது

# நாகை இலங்கை பயணிகள் கப்பல் நடுக்கடலில் பழுதாகி நின்றதால் தவித்த 141 பயணிகள் பத்திரமாக மீட்பு

நாகை இலங்கை பயணிகள் கப்பல் நடுக்கடலில் பழுதாகி நின்ற நிலையில் சுமார் 7 மணி நேரமாக உணவின்றி தவித்த 141 பயணிகள் பத்திரமாக மீட்கப்பட்டனர். நடுக்கடலில் கப்பல் பழுதானதால் உணவு, குடிநீரின்றி தவித்த 141 பயணிகளுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டது. தகவல் அறிந்து வந்த மீனவர்கள் மீட்புப் படகுகள் மூலம் பயணிகள் கப்பலை துறைமுகத்துக்கு இழுத்து வந்தனர். மீட்கப்பட்ட 141 பயணிகளுக்கும் நாகை துறைமுகத்தில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது.

# “இத்தனை ஆண்டுகளில் பார்க்காத குதிரை பேரம் தவெக மீது திமுக எம்.பி வில்சன் குற்றச்சாட்டு

சென்னை: மே.10–

இத்தனை ஆண்டுகளில் இல்லாத குதிரை பேர முயற்சிகளைத் தமிழ்நாடு இப்போதுதான் பார்க்கிறது என திமுக எம்.பி. வில்சன் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், “தமிழக அரசியலில் ‘மாற்றம்’ கொண்டு வரப்போவதாக அவர்கள் சொன்னதன் அர்த்தம் இப்போதுதான் எனக்குப் புரிகிறது. இத்தனை ஆண்டுகளில் இல்லாத குதிரை பேர முயற்சிகளைத் தமிழ்நாடு இப்போதுதான் பார்க்கிறது. இத்தனையும் பதவியேற்பதற்கு முன்பே நடக்கிறது” என்று தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் 108 இடங்களில் வென்றுள்ள தனிப்பெரும் கட்சியான தமிழக வெற்றிக் கழகம் (தவெக), ஆட்சி அமைப்பதற்கான பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது. காங்கிரஸ் (5), இந்திய கம்யூனிஸ்ட் (2) மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் (2) கட்சியின் ஆதரவு தவெகவுக்கு கிடைத்துள்ளது. இந்நிலையில், வெள்ளிக்கிழமை அன்று ஆளுநர் அர்லேகரை நேரில் சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார் தவெக தலைவர் விஜய்.

இந்தச் சூழலில் தவெக மீது பரபரப்பு குற்றச்சாட்டை முன்வைத்தார் டிடிவி தினகரன்., தேர்தலில் ஒரே ஒரு தொகுதியில் வென்றுள்ள தங்கள் கட்சியின் எம்எல்ஏவான காமராஜ், அதிமுகவை ஆதரிப்பதாக ஆளுநர் அர்லேகரிடம் கடிதம் வழங்கினார்.

பின்னர், தங்கள் கட்சியின் எம்எல்ஏ வை தன்னால் தொடர்புகொள்ள முடியவில்லை என்றும், அவரைக் காணவில்லை என்றும், குதிரை பேரத்தில் தவெக ஈடுபட்டுள்ளதாகவும் டிடிவி தினகரன் குற்றம்சாட்டினார்.

இதைத் தொடர்ந்து நள்ளிரவு சுமார் 12 மணி அளவில் ஆளுநர் மாளிகைக்கு வந்தார் அமமுக எம்எல்ஏ காமராஜ். தொடர்ந்து டிடிவி தினகரனும் அங்கு வந்திருந்தார்.

அப்போது பேசிய அமமுக எம்எல்ஏ காமராஜ், “நான் புதுச்சேரியில் தங்கி இருந்தேன். எனது மொபைல் எண்ணுக்கு மாலை 6 மணி அளவில் ஆளுநர் மாளிகையில் இருந்து அழைப்பு வந்தது. உடனடியாக இது தொடர்பாக வழக்கறிஞரிடம் பேசி, என்ன செய்யலாம் என முடிவு செய்தோம். நான் தவெகவுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை.

அந்தக் கடிதம் வாட்ஸ்அப்பில் வந்துள்ளது. நான் பயன்படுத்துவது வாட்ஸ்அப் வசதி இல்லாத போன். அதனால் எங்கள் கட்சியின் பொதுச் செயலாளர் இந்த விவரம் தெரிய வந்ததும் ஆளுநர் மாளிகைக்கு நேரில் வருகை தந்து விவரத்தை தெரிவித்தார்” என்று தெரிவித்தார்.

இதனையடுத்து காமராஜ் தனது கைப்பட கடிதம் எழுதும் வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# இந்தியக் கடற்படையின் புதிய தளபதியாக வைஸ் அட்மிரல் கிருஷ்ணா சுவாமிநாதன் நியமனம்

டெல்லி: மே.10–

இந்தியக் கடற்படையின் அடுத்த தலைமைத் தளபதியாக வைஸ் அட்மிரல் கிருஷ்ணா சுவாமிநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது மும்பையில் உள்ள மேற்கு கடற்படை கமாண்டின் தலைமை அதிகாரியாகப் பணியாற்றி வரும் இவர், மே 31ஆம் தேதி முறைப்படி இப்பொறுப்பை ஏற்றுக்கொள்வார்.



தற்போதைய கடற்படைத் தளபதி அட்மிரல் தினேஷ் குமார் திரிபாதி மே 30ஆம் தேதியுடன் ஓய்வு பெறுவதைத் தொடர்ந்து, அந்த இடத்திற்கு கிருஷ்ணா சுவாமிநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது பதவிக்காலம் டிசம்பர் 31, 2028 வரை நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியக் கடற்படையில் இவர் ஆற்றிய சிறப்பான மற்றும் நீண்டகால சேவையைக் கருத்தில் கொண்டு ஒன்றிய அரசு இவருக்கு இந்த உயரிய பொறுப்பை வழங்கியுள்ளது.

இத்துடன் நாட்டின் ராணுவக் கட்டமைப்பில் மற்றொரு முக்கிய மாற்றமாக, லெப்டினன்ட் ஜெனரல் என்.எஸ். ராஜா சுப்ரமணி (ஓய்வு) புதிய பாதுகாப்புப் படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ராணுவ விவகாரங்கள் துறையின் செயலாளராகவும் செயல்படுவார்.

தற்போதைய பாதுகாப்புப் படைத் தளபதி ஜெனரல் அனில் சவுகான் வரும் மே 30, 2026 அன்று தனது பதவிக்காலத்தை நிறைவு செய்ய உள்ளார். 11வது கோர்க்கா ரைபிள்ஸ் பிரிவைச் சேர்ந்த அனில் சவுகான், செப்டம்பர் 30, 2022 முதல் நாட்டின் இரண்டாவது சி.டி.எஸ் ஆகப் பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தவெகவுடன் கூட்டணி அமைத்ததால் காங். பேரூராட்சி தலைவர் ராஜினாமா:

## மு.க.ஸ்டாலின் பெற்றுத் தந்த பதவி என நெகிழ்ச்சி

திண்டுக்கல்: மே.10–

திண்டுக்கல் மாவட்டம், பட்டிவீரன் பட்டி பேரூராட்சியில் மொத்தம் 15 வார்டுகள் உள்ளன. திமுக கவுன்சிலர்கள் 10, நியமன உறுப்பினர் ஒன்று சேர்த்து 11 பேர், காங்கிரஸ் 2 கவுன்சிலர்கள், பாஜ, அதிமுக தலா ஒரு கவுன்சிலர் உள்ளனர். இதில் பேரூராட்சி தலைவராக 1வது வார்டு காங்கிரஸ் கவுன்சிலர் சியாமளா அறிவிக்கப் பட்டார். ஆனால், திமுக கவுன்சிலர்கள் ஒருமனதாக முடிவு செய்து 3வது வார்டு கவுன்சிலர் கல்பனா தேவியை தலைவராக தேர்ந்தெடுப்பதாக கூறினர். ஆனால், மு.க.ஸ்டாலின் கூட்டணி கட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் வெற்றி பெற்ற திமுகவை சேர்ந்த வேட்பாளர்கள் தங்களது பதவிகளை ராஜினாமா செய்ய உத்தரவிட்டிருந்தார்.

இதைத் தொடர்ந்து, பட்டிவீரன்பட்டி பேரூராட்சி தலைவராக தேர்வு செய்யப்பட்ட கல்பனாதேவி தனது பதவியை ராஜினாமா செய்தார். பின்னர் காங்கிரஸ் கட்சி சார்பில் அறிவிக்கப்பட்ட 1வது வார்டு கவுன்சிலர் சியாமளா தலைவராகவும், திமுகவை சேர்ந்த 3 வது வார்டு கவுன்சிலர் கல்பனாதேவி துணை தலைவராகவும் தேர்வு செய்யப்பட்டனர். சட்டமன்ற தேர்தலில் திமுக கூட்டணியில் இருந்த காங்கிரஸ் கட்சி விலகி தவெகவில் இணைந்தது. இதனை கண்டித்து திமுகவை சேர்ந்த தலைவர்கள் கண்டன அறிக்கைகளை வெளியிட்டனர். இந்நிலையில் பட்டிவீரன் பட்டி பேரூராட்சி தலைவர் சியாமளா தனது பதவியை நேற்று ராஜினாமா செய்து இதற்கான கடிதத்தை பேரூராட்சி செயல் அலுவலர் கோபிநாத் திடம் வழங்கினார்.

பதவியை ராஜினாமா செய்த சியாமளா கூறுகையில், “அப்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்த தலைவர் பதவியை எனக்கு பெற்று தந்தார். தற்போது காங்கிரஸ் கட்சி தமிழக வெற்றிக் கழகத்துடன் இணைந்துள்ளது. இதனால் எனது பதவியை ராஜினாமா செய்தேன். கடந்த 4 ஆண்டுகளாக பேரூராட்சி தலைவராக செயல்பட்ட எனக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி” என்றார்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421